NALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

A/L 88
பிரிவு III
விரைவில் ஆரம்பம்
விபரங்களுக்கு:-
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L 88
பிரிவு II
Physics - திரு.
Chemistry - திரு.
Zoology - திரு.
Botany - திரு.
Pure & Applied Maths
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி மீ 19 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரம்ழான் பிறை 23 (02 06 1986) UTHAYAN- A LIVELY TAMIL DAILY கதிர்: 167

# யாழ். நகரில் நேற்றுமீண்டும் மோதல்கள்

## இராணுவ வண்டி ஒன்று கடலுக்குள் குடை சாய்ந்தது

— அலுவலகச் செய்தியாளர் ; கே. ஆர். —

யாழ்ப்பாணம் ஜூன் 2

யாழ்ப்பாண நகரத்தில், சுமார் ஒருவார இடைவெளியின் பின்னர், நேற்று மீண்டும் போராளிகள் — படையினர் மோதல்கள் இடம்பெற்றன.

சுமார் நான்கு மணி நேரம் விட்டு விட்டு இரு சாராரும் மோதிக்கொண்டனர்.

இராணுவ "ட்ரக்' வண்டி ஒன்று போராளிகளின் சிலிண்டர் தாக்குதலில் கடலுக்குள் குடைசாய்ந்தது.

அதனைத் தொடர்ந்து 'ஷெல்' குண்டுகள் ஏவப்பட்டன; துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. ஹெலிக்கொப்டரிலிருந்தும் சுடப்பட்டது.

போராளிகளும் ரொக்கெட்லோஞ்சர்கள், நவீன துப்பாக்கிகள்கொண்டு தாக்குதல்கள் நடத்தினர். குண்டுகளும் வெடிக்க வைக்கப்பட்டன.

இம்மோதல்களின்போது ஆறு சிப்பாய்கள் காயமடைந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

நேற்று நண்பகல் சுமார் 12.15 மணியளவில் மண்டைதீவு மினி முகாமில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் "ட்ரக்"வண்டி ஒன்றில் கோட்டை முகாமை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

சில சிப்பாய்கள் 'ட்ரக்' வண்டியின் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தனர்.

இராணுவ ட்ரக் வண்டியில் பலவகை உணவுப் பொருள்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

பண்ணை சங்கிலிப்பாலத்திலிருந்து சுமார் 200 யாருக்கு அப்பால் உள்ள மதகு ஒன்றிற்கு மேலாக ட்ரக் வந்துகொண்டிருந்த சமயம் மதகினுள் வைக்கப்பட்டிருந்த சிலிண்டர் குண்டு வெடித்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் 'ட்ரக்' வண்டி கடலினுள் குடைசாய்ந்தது.

பண்ணை - மண்டைதீவு வீதியும் இந்தத் தாக்குதலினால் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அடிக்கடி கோட்டை முகாமிலிரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஈழ இராணுவம் உரிமை கோருகிறது

சென்னை, ஜூன் 2

நேற்றுப் பண்ணைப் பாலத்திற்கு அருகே இராணுவ ட்ரக்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலுக்கு தமிழ் ஈழ இராணுவம் உரிமை கோரியிருக்கிறது.

இது தொடர்பாக அந்த இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கோட்டை முகாமுக்கும் அதற்கு பாதுகாவலாக யாழ். குடாநாட்டில் உள்ள வேறு சிறி

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

2 — 06 — 1986

திங்கட்கிழமை

சுபநேரம்:
11·52முதல் 1·22 வரை

ராகுகாலம்:
7·22முதல் 8.52 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### நோன்பு நேரம்

| | |
|---|---|
| சஹார் | 4·18 |
| மஃரிப் | 6·24 |

ரயில் குண்டு வெடிப்பின் விளைவு

## 5 தமிழர்கள் தாக்குண்டு உயிரிழப்பு?

கொழும்பு, ஜூன் 2

உதயதேவி ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 5 பேர் தமிழர்கள்.

இவர்கள் குண்டு வெடிப்பினால் உயிரிழக்கவில்லை என்றும்—

தாக்குதல் காரணமாகவே உயிரிழந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

இவர்களில் இரண்டு பேரின் சடலங்கள் மட்டுமே அடையாளக் கார்ட் மூலமாக அடையாளங் காணப்பட்டன.

ஒருவர், ஞானப்பிரகாசம். மாகோவில் வைத்து இவர் ரயில் ஏறினார். மற்றவர் சிவதாஸன்.

இறந்த மற்றவர்களில் இரண்டு பேர் விமானப்படை வீரர்கள். ஒருவர் பொலிஸ்.

ரயிலில் சென்ற தமிழ்ப் பயணிகளிடம் இருந்து நகை, பணம் மற்றும் பொருள்களும் கொள்ளை அடிக்கப்பட்டதாகவும் முறைப்பாடுகள் வந்து உள்ளன (உ-எ-2-1)

## பந்து விளையாடிய சிறுவர்களின் உயிரை 'ஷெல்' விளையாடியது

யாழ்ப்பாணம், ஜூன் 2

குருநகரில் பந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் உயிரை "ஷெல்" விளையாடியது.

இதனால் இரண்டு சிறுவர்கள் பலியானார்கள். நான்குபேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை சுமார் நான்கு முப்பது மணியளவில் நடைபெற்றது.

நேற்று மாலை குருநகர் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் பத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பந்து விளையாடிக்கொண்டிருந்தனர்.

திடீரென கோட்டையில் இருந்து கரும் புகையைக் கக்கிவந்த "ஷெல்" குண்டு சிறுவர்கள் பந்து விளையாடிய மைதானத்தில் விழுந்து வெடித்தது.

இதனால் 14 வயதுடைய சிறுவன் ஒருவன் குடல் வெளியேறிய நிலையில் அந்த இடத்திலேயே பலியானான்.

துரைராசா அன்ரனி (12 வயது) என்ற சிறுவன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின் மரணமானான்.

காயமடைந்த மேலும் ஓர் இளைஞர் அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

"ஷெல்" விழுந்த அதிர்ச்சியினால் சில சிறுவர்கள்மயக்கமுற்று விழுந்ததாகவும் தெரியவருகிறது.

(உ-10)

★ 8 கடைகள், 4 வீடுகள் சேதம

## 'ஷெல்' தாக்குதலுக்கு 4பேர் பலி! 30பேர் காயம்!!

### நகரின் நாலா பக்கங்களிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன

யாழ்ப்பாணம், ஜூன் 2

நேற்று யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து "ஷெல்" தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் நால்வர் கொல்லப்பட்டனர் முப்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

எட்டுக் கடைகள், நான்கு வீடுகள் சேதமடைந்தன.

இச் சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

நேற்றுப் பகல் பண்ணை வீதியில் நடந்த இராணுவ "ட்ரக்" வண்டி மீதான தாக்குதலை அடுத்தே மேற்படி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து கோட்டை இராணுவ முகாமி

(4ஆம் பக்கம் பார்க்க)



ஆபத்துக்குப் பாவமில்லை எண்டு அரசாங்கம் யோசிச்சுப் போட்டுதோ பின்னை. இல்லாட்டால் சிறிமாவின்ரை பக்கம் போக மாட்டினமே...!

## பூஸாவில் தமிழர் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூன் 2

இலங்கை குளிர்பானத் தொழிற்சாலை குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து பூஸா தடுப்பு முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டார்கள் எனக் கூறப்பட்டது.

மேலதிகாரிகளின் தலையீட்டைத் தொடர்ந்தே தாக்குதல்கள் நிறுத்தப்பட்டன என்று சொல்லப்படுகிறது.

(உ-எ-2)

## விசுவலிங்கம் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவரும் "சற்றடே றிவியு" ஆங்கில வாரப் பத்திரிகையின் பொதுமுகாமையாளருமான திரு. சா விசுவலிங்கம் காலமானார். அவருக்கு வயது 71. அவர் சமூகத் தொண்டரும், சமயத் தொண்டருமாவார்.

கொழும்பில் அரசாங்க சேவையில் உயர் பதவி வகித்த காலத்திலும், இளைப்பாறிய பின்னரும் சமூகத் தொண்டில் சளைக்காது ஈடுபட்டு வந்தவர் திரு. விசுவலிங்கம்.

நாவலர் சபை, அகில

(4ஆம் பக்கம் பார்க்க )

அரச சிரேஷ்ட தலைவர்கள்

# சிறிமாவுடன் அவசரமான ரகசியப்பேச்சு!

கொழும்பு, ஜூன் 2

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவது சம்பந்தமாக அரசின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் அவசர இரகசியப் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளனர்.

வன்செயல்கள் கொழும்புப் பகுதியில் அடுத்தடுத்து இடம்பெற்று வருவதைத் தொடர்ந்து, திருமதி பண்டாரநாயக்காவுடன் பேச்சுக்களை நடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சிதம்பரம் குழு மூலம் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ள யோசனைகளுக்கு புதிய விளக்கங்களையும் வழிமுறைகளையும் சமர்ப்பிக்கப் போவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியத் தூதர் டிக்ஸிற்றிடம் கடந்த சனிக்கிழமை அறிவித்து இருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் விவரம் கொழும்பில் சேகரிப்பு

கொழும்பு, ஜூன் 2

கொழும்பு மாநகரில் உள்ள தமிழர்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

மாநகரில் எங்கு எங்கு தமிழர் வசிக்கின்றனர்; யாருடன் வசிக்கின்றனர், எவ்வளவு காலமாக வசித்து வருகின்றனர் போன்ற விவரங்களே சேகரிக்கப்பட்டு வருவதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கிராம சேவகர்களின் உதவியுடன் இவ் விவரங்கள் சேகரிக்கப்படத் தொடங்கிவிட்டனவாம்.

(உ-எ-2)

## 28 யாழ் தமிழர்கள் ஐ. நா.விடம் தஞ்சம் கோரி விண்ணப்பம்

வார்ஸோ, ஜூன் 1

ஏதாவது நாடு ஒன்றில் புகலிடம் பெற்றுத் தருமாறு போலந்தில் தஞ்சம் புகுந்துள்ள 28 யாழ்ப்பாணம்வாசிகள் ஐ.நா. அகதிகள் ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி போலந்து நாட்டிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 28 தமிழர்கள் அடைக்கலம் புகுந்தனர். இவர்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள்.

போலந்து அரசு இவர்களுக்கு இரண்டு வார விஸா வழங்கியது.

இவர்கள் டென்மார்க்கில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தனர். இந்த விண்ணப்பத்துக்கான பதில் வரும் வரை, போலந்து அரசு விஸாவைப் புதுப்பித்து வந்தது.

இறுதியாக டென்மார்க் அரசு இவர்களின் விண்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகடையில் 50 தமிழர் சாகும் வரை உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூன் 2

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள 50 தமிழ்க் கைதிகள் மே 31 முதல் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர் என்று தெரியவருகிறது

தடுப்புக் காவலில் உள்ள ஹென்றி பெரேராவை தமிழ்க் கைதிகளுடன் தடுப்புக் காவலில் வைக்க வேண்டும்.

ஹென்றி பெரேராவுக்கு அரசியல் கைதி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளை முன் வைத்தே தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

இதே கோரிக்கைகளை முன் வைத்து தமிழ்க் கைதிகள் மே பதினெட்டில் அடையாள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் சிக்கிய பஸ் சுக்கு நூறாகியது

### மரண விசாரணையில் சாட்சி

- திருமலை மாவட்டச் செய்தியாளர் -

கண்ணி வெடியில் சிக்கிய பஸ் மேலே தூக்கி எறியப்பட்டது. பின்னர் துண்டாக, துண்டாகச் சிதறி நாலா பக்கமும் வீசப்பட்டன.

மூதூர், பச்சனூர் நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் இறந்தவர்களின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

சிதறுண்ட பஸ்ஸின் பின்னால் வந்த வானின் சாரதி டபிள்யு. எஸ். பிரேமசிறி சாட்சியமளித்தார் [illegible] சிப்பாய்கள் ஜீப், பஸ், வான் ஆகிய வாகனங்களில் மூதூரில் இருந்து தெஹிவத்த நோக்கிச் சென்று கொண்டு இருந்தனர். வானை நான் ஓட்டிச் சென்றேன்.

பஸ் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கியது. அந்த பஸ்ஸில் எனது தாயாரும் சகோதரியும் பிரயாணஞ் செய்தனர். இச் சம்பவத்தில் அவர்கள் இறந்து விட்டனர்.

இப்படி வான் சாரதி பிரேமசிறி சொன்னார்.

(உ-எ-150)

## வயாவிளான், பலாலியில் நேற்று ஹெலி தாக்குதல்

பலாலி, ஜூன் 2

நேற்றுக் காலை 11-30 மணியில் இருந்து பிற்பகல்வரை வயாவிளான் மகாவித்தியாலய இராணுவ முகாமைச் சுற்றியும் - பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுமுள்ள இடங்களில் ஹெலிக்கொப்டரிலிருந்து படுமோசமாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

வயாவிளான் முகாமில் இருந்து இராணுவத்தினர் பின்பகுதியாக குரும்பசிட்டியை நோக்கியும் - முன்பகுதியாக புன்னாலைக்கட்டுவன் நோக்கியும் சரமாரியாகச் சுட்டுக்கொண்டே வெளியேற முயற்சித்தனர்.

பலாலி முகாமில் இருந்து வயாவிளான் முகாமுக்கு அதன் பின்பக்கமாக இராணுவத்தால் அமைக்கப்பட்ட பாதையூடாக கவசவாகனங்களும், பல சாமான்களுடன் 'ட்ரக்'குகளும் வந்து சேர்ந்த சிறிது நேரத்திலேயே இராணுவத்தினர் வெளியே வர முனைந்தனர்.

அவ்வேளையில் ஹெலிக்கொப்டர் என்றுமில்லாதவாறு மிகத் தாழப் பறந்து சுட்டது.

குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் போராளிகளால் ஹெலிக்கொப்டரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயாவிளான்

# தபால் நிலையம் செல்ல மக்கள் அச்சம்

## இடம் மாற்றுமாறு அரச அதிபரை பிரசைகள் குழு கோருகிறது

பலாலி, ஜூன். 2

வயாவிளான் தபால் நிலையத்தை உடனடியாக ஒட்டகப்புலத்திற்கு மாற்றி உதவ வேண்டுமென்று வயாவிளான் பிரசைகள் குழு யாழ். அரசாங்க அதிபரையும் யாழ். பிரதேச தபால் அத்தியட்சகரையும் மிக அவசரமாக வேண்டியுள்ளது.

அடிக்கடி வயாவிளான் சந்தியை நோக்கி சிப்பாய்கள் நடைபவனியாக வருவதால் சந்தியில் அமைந்திருந்த தபால் நிலையத்துக்கு மக்கள் வரப் பயப்பட்டனர். இதன் காரணமாக 6 மாதங்களுக்கு முன் வயாவிளான் மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள ஒரு தனியார் கட்டடத்திற்கு இது இடம்மாற்றப்பட்டிருந்தது.

தற்போது வயாவிளான் மகாவித்தியாலயத்திலும் முகாம் அமைக்கப்பட்டதனால் மீண்டும் தபால் நிலையம் முற்றாக இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

அச்சுவேலி வீதியில் உள்ள ஒட்டகப்புலம் கிராமத்தில் இதற்கான கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்விடம் இதற்குப் பொருத்தமானதாக இருப்பதாகவும் பிரசைகள் குழுப் பிரமுகரான திரு. முத்தையா தெரிவித்தார். (இ-119)

## மண்டைதீவில் பொருள் விலை அதிகரிப்பு

நல்லூர், ஜூன். 2

மண்டைதீவுப் பகுதியில் உணவுப் பொருள்கள், எரிபொருள்கள் ஆகியவற்றின் விலைகள் இரண்டுமடங்காக உயர்ந்துள்ளன.

தீவுப்பகுதி போக்குவரத்தில் ஏற்பட்ட சீர்கேடுகள் காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் ஒரு கிலோ மா 20 ரூபாவிற்கும், ஒருகிலோ சீனி 23 ரூபாவுக்கும், மண்ணெண்ணெய் ஒருபோத்தல் 20 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

## விடியோ உபகரணங்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தொடர்ந்து விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளையும் மீறி ஆபாசப் படம் ஒன்றை திரையிட்டதால் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில் உள்ள மினி சினிமா ஒன்றில்நேற்றுமுன்தினம் விடியோ உபகரணங்கள் எம்மால் பறிமுதல் செய்யப்பட்டன.

மினி சினிமா அரங்குகளில் இவ்வாறான படங்கள் திரையிடப்படின் அதுபற்றி எமது கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவருமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி மாணவர் இளைஞர் பொது மன்றம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

## கூலிப்படை இங்கு இல்லையாம்

புதுடில்லி, ஜூன், 1

பிரிட்டிஷ் அரசுக்கு தெரிந்தோ அல்லது அதன் ஆதரவுடனோ கூலிப்படைகள் இலங்கையில் இயங்கவில்லை. இதை நான் உறுதியாகக் கூறுவேன்.

இப்படி பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் நீல் கின்னொக் புதுடில்லியில் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரசைகள் கூலிப்படைகளாக ஏனைய நாடுகளில் இயங்குவதைத் தடுக்கும் சட்டம் பிரிட்டனில் உள்ளது.

அப்படி அவர்கள் செயற்படத் தொடங்கிவிட்டால் அதனைத் தடுப்பது கஷ்டமானது.

இப்படி அவர் மேலும் சொன்னார்.

முதலாண்டு நினைவஞ்சலி



**ஆறுமுகம் குணநாயகம் (S.L.A.S.)**

முன்னாள் உதவி அரசாங்க அதிபர் வவுனியா.
முன்னாள் பதில் உதவி அரசாங்க அதிபர், நெடுங்கேணி.

ஆண்டவன் அளிப்பு: **20-03-1944** அரக்கர் அழிப்பு: **15-05-1985**

அன்பின் திருவுருவே
ஆணவம் அற்றவனே
இல்லாளின் இனியவனே
ஈகையின் பெரியவனே
உள்ளங்களில் உறைபவனே
ஊருக்கு உழைத்தவனே
எல்லோர்க்கும் ஏற்றவனே
ஏணிபோல் நின்றவனே
ஐயம் தெளிந்தவனே
ஒற்றுமைக்கு உழைத்தவனே
ஓர் பாகம் சாராதவனே
ஔடதம் போன்றவனே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், மனைவி, மகன், மகள், சகோதர-சகோதரியர், மாமன்மார்-மாமிமார், பெருமக்கள்-மருமக்கள், உறவினர்-நண்பர்.

சாவகச்சேரி

கரீம் போட்டியின் பின்னரே

## நடிகை சுஹாசினி விருது பெற்றார்

தேசிய விருதுத் தெரிவில் தென்னிந்தியத் திரைப்படங்கள் 11 தேசிய விருதுகளைத் தட்டிக்கொண்டன.

மொத்த விருதுகள் 23 இந்த ஆண்டு 3விருதுகள் வழங்கப்படவில்லை.

வழங்கப்பட்ட விருதுகள் 20 அவற்றில் 11 விருதுகள் தென்னிந்தியத் திரைப் படங்களுக்குக் கிடைத்தன.

இந்தியாவின் சிறந்த நடிகையாக சுஹாசினி தெரிவானார்.

'சிந்து பைரவி' தமிழ்ப்படத்தில் சிறப்பாக நடித்ததற்காக இந்தியாவின் சிறந்த நடிகை தேசிய விருது சுஹாசினிக்கு கிடைத்தது.

சிறந்த நடிகை விருது மட்டும் தெரிவுக்குழுவினால் ஏகமனதாக வழங்கப்படவில்லை.

இறுதித் தெரிவில் சுஹாசினிக்குப் போட்டியாகராக்கி வந்தார்.

ராக்கி நடித்த வங்காளப் படமான 'பரோமா' மலாகோஸ்வாமி நடித்த அஸ்ஸாம் மொழிப்படமான 'அக்னிஸ்நான்' ஷபானா அஸ்மி நடித்த ஹிந்திப்படமான 'ஏக்பல்' ஆகியவை சிறந்த நடிகைத் தெரிவுக்கு வந்திருந்தன.

ஷபானாவின் நடிப்புத் திறமையைப் புதியதாகக்காட்ட படத்தில் ஒன்றுமே இருக்கவில்லை.

'அக்னிஸ்நானில் கோஸ்வாமி நடிப்பும் எடுபடவில்லை.

அதனால் இறுதித் தேர்வுக்கு சுஹாசினியும் ராக்கியும் தான் போட்டியிட்டனர்.

தினசரி சினிமா

## புலோலி ப. நோ. கூ. ச கூட்டம்

பருத்தித்துறை, ஜூன் 2

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜூன் மாதம் 21ந் திகதி சங்கத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் பிரதம சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-118)

## குறிகாட்டுவான்-- நெடுந்தீவு படகுச்சேவை வாரம் 3 நாள்

### எரிபொருள் தட்டுப்பாடு காரணம் உணவுப் பொருளின்றி மக்கள் அவதி

மண்டைதீவு ஜூன். 2

குறிகாட்டுவான் — நெடுந்தீவு படகுசேவை வாரத்தில் மூன்று நாட்கள் மட்டும் தற்போது நடைபெறுகின்றது.

திங்கள்— புதன்— வெள்ளி ஆகிய தினங்களில் படகுச்சேவை நடைபெற்று வருவதால் பிரயாணிகள் மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இங்கு நீண்ட நாட்களாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருவதால் எங்கும் இருள் மயமாக காட்சியளிக்கின்றது.

மக்கள் உணவுப் பொருள்கள் கிடைக்காத காரணத்தால் பசியாலும் பட்டினியாலும் வாடுகின்றார்கள்.

கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் உணவுப் பொருள்கள் கையிருப்பு குறைந்துவிட்டது.

உணவு முத்திரைகளுக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உணவுப் பொருள்களை மக்கள் கொள்வனவு செய்ய முடியாமல் மிகவும் கஷ்டமடைகின்றார்கள்.

இங்குள்ள தனியார் விற்பனவு நிலையங்களிலும் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மூன்று மாதத்துக்குரிய உணவுப் பொருள்கள் எந்தநேரமும் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கையிருப்பில் இருக்க வேண்டும் என்று யாழ் அரசாங்க அதிபரால் அண்மையில் விசேஷ நிதி ஒதுக்கப்பட்டும் இந்த நிலை ஏற்பட்டது குறித்து மக்கள் அதிருப்தியடைகின்றார்கள்.

முன்பு தினமும் மூன்று தடவை நடைபெற்று வந்த படகுச் சேவை பின்பு ஒருதடவையாக குறைக்கப்பட்டு தற்பொழுது வாரத்தில் மூன்று நாட்களுக்கு மட்டுமே நடைபெறுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இப் படகுசேவைகுறைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல மாதங்களாக இப்பகுதிகளில் ஒழுங்காக தபால் சேவையும் நடைபெறுவதில்லை.

இதனால் இங்குள்ள தபால் நிலையங்களில் உள்ளூர் — வெளியூர் தபால்கள் தேங்கி கிடக்கின்றன. (இ-143)

## திருட்டு

பலாலி, ஜூன் 2

வாயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தோரின் வீடுகளில் இருந்து நாளுக்கு நாள் பல பொருள்கள் களவு போகின்றன.

இப்பகுதிகளுக்கு திருடர்கள் எவ்வாறு போகின்றார்கள் என வீட்டுச் சொந்தக்காரர்கள் அதிசயப்படுகின்றார்கள்.

# கிருமிநாசினியை குறைத்து வேப்பம் இலையை பயன்படுத்துக

## விவசாயிகளுக்கு ஆலோசனை

வட்டுக்கோட்டை, ஜூன் 2

யாழ்ப்பாண விவசாயிகள் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதைக் குறைத்து அதற்குப் பதிலாக வேப்பம் இலைகளை பயன்படுத்த வேண்டும். வேப்பம் இலைகளை காய்ந்த நிலையில் உழவு நேரத்தில் சேர்த்து உழுது பண்படுத்துவது பலவிதமான நன்மைகளைப் பயக்கும்.

சங்கானை சிவப்பிரகாச மாகவித்தியாலயத்தில் சங்கானை கிழக்குப் பிரிவு பயிர்ச் செய்கை உத்தியோகத்தரும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தலைவருமான திரு. ஜி. சிதம்பரநாதன் தலைமையில் விவசாயிகள் குழுக்கள் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

பேராசிரியர் கா. சதாசிவம்பிள்ளை அதில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இளைப்பாறிய விவசாயப் பொருளியல்துறை பேராசிரியர் கா. சதாசிவம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது.

திராட்சைக்கொடிச் செய்கையில் ஈடுபட்டுள்ள யாழ்ப்பாண விவசாயிகள் இன்று பெருமளவு வெற்றியைப் பெற்றுள்ளனர் இச்செய்கையினால் எதிர்பாராத அளவு பயன் கிடைத்துள்ளது.

கிருமிநாசினியை பயன்படுத்தும் விவசாயிகள் இனிமேலாவது இதனைக் குறைத்து இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணப் பகுதிகளில் கூட்டுறவு இயக்கங்கள் மேலும் வளர வேண்டும்.

இக்கூட்டுறவு இயக்கங்கள் விவசாயிகளின் நன்மை கருதி இயங்கவேண்டும்.

இவை மோசடிகள் ஊழல்கள் அற்ற நிலையில் விவசாயிகளுக்குத் தேவையான விதைப் பொருள்கள்,எரிபொருட்கள் முதலானவற்றை பங்கீட்டு அடிப்படையில் விவசாய அட்டை மூலம் வழங்கவேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

யாழ் மாவட்ட விவசாயக் காப்புறுதி பணிப்பாளரும் முன்னாள் பெரும்பாகக உத்தியோகத்தருமான திரு எஸ். சிவகுரு உரைநிகழ்த்தும் போது விவசாயிகள் பலர் நெற் காப்புறுதி செய்திருந்தும் அவற்றைச் சரியான முறையில் கவனித்து நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முன்வருவதில்லை என்றார்.

பண்டத்தரிப்பு விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன் வட்டுக்கோட்டை கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. ஆ. முருகேசு ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (இ. 161)

மாகிலம் மாவட்டம் உள்ளூர்

# கிளிநொச்சி பிரசைகள் குழு கலைக்கப்பட்டது

கிளிநொச்சி, ஜூன். 2

கிளிநொச்சி பிரஜைகள் குழு கலைக்கப்பட்டது.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தலைவர் டாக்டர் கே. சுப்பையா தலைமையில் கிளிநொச்சி பராசக்தி படமாளிகையில் இக்குழுவின் விசேஷ பொதுக்கூட்டம் ஒன்று கடந்த 29 ஆம் திகதி கூட்டப்பட்டது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பன்னிரண்டு கிராம சேவகர் பிரிவுகளில் இருந்தும் சுமார் 200க்கு மேற்பட்ட பொதுமக்கள் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

பிரஜைகள் குழு இயங்காதிருப்பது குறித்தும் இக் குழுவின் செயற்குழுவினரிடையே எழுந்த உட்பூசல்கள் காரணமாக எழுந்த பிரச்சினைகளால் குழுவின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தது பற்றியும் கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இவற்றைக் கேட்டறிந்த பொதுமக்கள் (சபையோர்) பல வாதப் பிரதிவாதங்களின் பின்னர் தற்போது இருந்த குழுவின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி குழுவைக் கலைத்தனர்.

இதனைத் தொடர்ந்து ஒன்பது பேர் கொண்ட பிரசாரக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

இக்குழு தற்போதைய பிரசைகள் குழுவின் செயற்குழுவிடம் உள்ள தஸ்தாவேஜுக்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளும்.

பின் பொதுமக்கள் மத்தியில் பொதுக் கூட்டம் சம்பந்தமான அறிவித்தலைக் கொடுத்து புதிய பிரசைகள் குழு ஒன்றை அமைக்க உதவும்.

தற்போது தெரிவு செய்யப்பட்ட பிரசாரக் குழு அங்கத்தவர் வருமாறு;-

தலைவர் திரு. த. சுப்பிரமணியம் (நீர்ப்பாசன பொறியியலாளர்), செயலாளர் திரு. சி. தனபாலசிங்கம் (கிராமசேவகர்), உறுப்பினர்கள்; திரு. சி. கதிரவேலு (குருகுலம் நிர்வாகி), திரு. சி. தங்கராசா(வட்டக்கச்சி கி.அ.ச. தலைவர்), திரு. எஸ். பி. பரராசசேகரம் (மரண விசாரணை அதிகாரி), திரு. ஐ. நடராசா (முரசுமோட்டை பி. கு.), திரு. மா. சிவபாலன் (திருநகர் கி. அ. சங்கம்), திரு. சி. நடராசா (கணேசபுரம்), திரு. எஸ். சந்தானம் பிள்ளை (வணபிதா).

## பிரதி ஜெயிலர் கைதானது ஏன்?

மட்டக்களப்பு, ஜூன் 2

தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில்தான் மட்டக்களப்புச் சிறைச்சாலை பிரதி ஜெயிலர் எஸ். சிவசுந்தரம் கைது செய்யப்பட்டார்.

இப்படி சிறைச்சாலைத் திணைக்களத்துக்குப் பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

## ஒரே இரவில் 3 இடங்களில் கைகொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன் 2

வெள்ளி இரவு மூன்று இடங்களில் நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டன.

இயக்கங்களின் பெயரைச் சொல்லி நகைகள் கொள்ளை அடிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கொக்குவில்,இணுவில், [illegible] நகைக் கொள்ளை [illegible]

மக்கள் முகம்

## உதயநகர் அபிவிருத்தி நிர்வாகிகள்

கிளிநொச்சி, ஜூன். 2

கிளிநொச்சி உதயநகர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் தெரிவு கிளிநொச்சிக் கிராம சேவையாளர் திரு. எஸ். தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். பால், உபதலைவர்கள் திரு. எஸ். தம்பு, திரு. க. ஜெயசிங்கம், செயலாளர் திரு. பொ. சி. சிவலிங்கம், உப செயலாளர் திரு. எஸ். கமலநாதன், பொருளாளர் திரு.எம். சிவராசா.

ஏழுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

கணக்காய்வாளர் திரு. இரா. லோகநாதன், போஷகர் திரு. எஸ். தனபாலசிங்கம், சமூகசேவை உத்தியோகத்தர் திரு. எம் தருமபாலன், ஆசிரியர் திரு. எஸ். சவுந்திரராஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அனுதாப தீர்மானம்

யாழ்ப்பாணம் ஜூன் 2

பண்டிதமணி கணபதிப்பிள்ளை பிரபல எழுத்தாளர் கே. டானியல் கலவான எம்.பி. திரு. சரத் முத்தெட்டுவேகம ஆகியோரின் மறைவு குறித்து கட்டைவேலி—நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அனுதாபத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் [illegible] நிறைவேற்றப்பட்டன. (உ — எ)

## மண்டைதீவு: ஆசிரியர் பற்றாக்குறை

மண்டைதீவு,ஜூன் 2

மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்கள் மிகவும் கஷ்டமடைகின்றார்கள். (இ-143)

## நைமிசாரணிய நாகரிகத்தில் இந்து பாரம்பரிய கூறுகள்

### நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஜூன் 2

வெள்ளப் பெருக்குக் காரணமாக சிந்துவெளி நாகரிகம் ஹரப்பா மொகஞ்சதாரா நாகரிகம் வெளிப்பட்டது போன்று, நைமிசாரணிய நாகரிகம் வெளித்தோன்றியுள்ளது. இங்கு இந்துபாரம்பரியக் கூறுகளைக் கண்டு வியக்கிறோம்.

சுதுமலை புவனேஸ்வரி அம்மன் கோவில் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றுகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக பதிவாளர் திரு. வே. ந சிவராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆறுமுகநாவலர் சபையின் இணைச் செயலாளர் திரு. கா. விசுவலிங்கம் இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார்

உயரப்புலம் மகாவித்தியாலய ஆசிரியர் திரு. சே. பொன்னம்பலம் வரவேற்புரை கூறினார்

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி வி. கோபாலகிருஷ்ணன் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

திரு. வே.ந. சிவராசா தனது சிறப்புரையில் தொடர்ந்து கூறியதாவது:—

எமது சமய புராணங்கள் எல்லாம் எடுத்துரைக்கப்பட்டது நைமிசாரணியத்தில் தான், ஞானிகள் கூடிய இத்தலம் புராணத்தில் வருகின்ற மானசீகமான இடமென நாம் இதுவரை நினைத்திருந்தோம்.

ஆனால் உண்மையில் வரலாற்று பூகோள ரீதியாக அமைந்த ஒரு தொல்பதி நைமிசாரணியம் என்று இன்று தெளிந்துள்ளோம்.

இப்பதி பற்றி சுதுமலை அம்மன் கோவில் ஊஞ்சற் பாட்டில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இவ்வாறு திரு. சிவராசா கூறிமுடித்தார்.

நூலாசிரியரும், யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளருமான திரு. த. காசிநாதன், யாழ் செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த குலசேகரம், யாழ் பல்கலைக்கழக துணைவிரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

திரு. ந. குமாரசிவம் நன்றியுரை கூறினர். (இ 9)


## பம்பாய் வெங்காய விதை

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தின் முயற்சியால் இறக்குமதி செய்யப்பட்ட விதை விவசாய அதிகாரிகளால் உத்தரவாதம் செய்யப்பட்டது. விஞ்ஞான முறைப்படி களஞ்சியப்படுத்தப்பட்டது, வெளிவந்த பயிர் திறமையாகவுள்ளது. சிறிய அளவு விதை கையிருப்பிலுள்ளது.

பெறுமிடம்;

**ஶ்ரீமகள் ரேடர்ஸ்**

158, ஆஸ்பத்திரி வீதி
(பெரிய கடை)
யாழ்ப்பாணம்
தொலைபேசி; 23573


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இன்று உடையான் உள்ளவன் இல்லாதவனுக்கு ஒன்றைக் கொடுப்பான் உடையானாயினும் அவ்வாறே செய்யட்டும்.

-யேசுநாதர்-


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

இல. 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 02-06-86 தொலைபேசி 24805 22078 த. பெ 23


## கிராமங்கள் தோறும் இரத்த தானம் வேண்டும்

ஒரே நாளில் 54 பைந்து இரத்தம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கிடைத்திருக்கிறது. அந்தளவு இரத்தத்தையும் தானம் செய்தவர்கள் குருநகர் வாசிகள். அவர்களின் நல்ல இதயங்களையும், தொண்டையும் பாராட்டுகிறோம்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வடக்கின் பிரதானமான — முதன்மையான ஆஸ்பத்திரி. அதன் சேவையும் தேவையும் பெருகிவரும் காலம் இது.

குறிப்பாக போர் நிலைமை நிலவும் இந்தச் சூழ்நிலையில் அதன் சேவை அதிகமாகி வருகிறது.

எனினும் தேவைக்கேற்ற விதத்தில், அதன் சேவைக்குரிய பரிமாணத்தில் அங்கு வசதிகள் இல்லை.

இது விடயத்தைக் கடந்த ஆறு மாத காலத்தில் இப்பத்தியில் பல தடவைகள் எடுத்துக் கூறிவிட்டோம்.

தமிழ்ப் பகுதிகளின் தேவைகளை நிறைவேற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை. அந்த வகையில் தனது கடமையைத்தானும் அரசு செய்யுமா என்று சந்தேகம் கொள்ள வேண்டியநிலை வந்துவிட்டது.

போராளிகளின் நடவடிக்கைகளுக்கு வஞ்சம் தீர்க்கும் விதத்தில் தமிழ்ப் பகுதிகளை அரசாங்கம் எல்லா வகைகளாலும் புறக்கணித்தும், ஒடுக்கியும் வருகிறது.

எனவே ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், மற்றும் சமூக சேவை நிலையங்களுக்குத் தேவைப்படும் வசதிகளை அரசு செய்யும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கட்டடத்தில் 'ஷெல்' குண்டு விழுந்தபோது அதற்குத் தனது படைகள் காரணமல்ல என்று உலகுக்கு எடுத்துக் காட்ட அரசு அவசரப்பட்டது. அந்த அளவுக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளிக்கு வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பது சந்தேகம்.

எனவே இயன்றவரை யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான வசதிகளை மக்களே பெருக்கிக் கொள்ள வேண்டும். அதற்காக தமிழ் மகன் ஒவ்வொருவனும் தன்னால் இயன்றவரை — தனது இயல்புக்கு ஏற்றவரை உதவ வேண்டும்.

அதற்கு முன் உதாரணமாக குருநகர் மக்களின் தாராள மனதைக் கொள்ளலாம். தமது சகோதரர்களின் நலனுக்காக உதவ வேண்டும் என்ற தயாள சிந்தை, குருநகர் மக்களைப் போல் எல்லாத் தமிழர்களுக்கும் இருக்க வேண்டும். இதுவரை இல்லையெனில் இனியாவது அதனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்கள் எல்லோரும் மரணத் தறுவாயில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்டத்திலாவது மற்றவன் துயர்துடைக்கவேண்டும், உயிர்காக்கவேண்டும் என்ற தாராள மனப்பான்மையும், இரக்க சிந்தையும் வரவில்லை எனில் எமது இனம் உய்ய முடியுமா?

மற்றவர் துயர்துடைக்கும் விடயத்தில் குருநகர் மக்களைப் பின்பற்றுவோமாக.

குருநகர் மக்கள் இந்த நல்ல பணியைச் செய்ய யாழ்ப்பாணம் லியோக் கழகமும் குருநகரில் உள்ள பொது அமைப்புக்களும் தூண்டுதலாக இருந்திருக்கின்றன.

அதே போல வடக்கின் எல்லாப் பகுதிகளிலும், சகல கிராமங்களிலும் இரத்த தான நிகழ்ச்சிகளை ஏனைய சமூக இயக்கங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் அடிக்கடி இரத்தத் தட்டுப்பாடு ஏற்படாது என நம்பலாம்.

## அரசின் யோசனைக்கு புதிய விளக்கம் இப்போது இல்லை

கொழும்பு, ஜூன் 2

ராஜீக மட்டத்தில் தொடர்பு கொள்ளப்பட்ட பின்னர் தான், இலங்கை தனது யோசனைகளுக்கு விளக்கங்கள் புதிய வழிமுறைகளை இந்திய அரசுக்கு சமர்ப்பிக்கும்,

இப்படிக் கொழும்பில் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இந்தியத் தூதர் திரு டிக்ஸித் புதுடில்லி புறப்பட்டுச் சென்றார்

வியாக்கியானங்கள், புதிய வழிமுறைகளை இலங்கை அரசு, திரு. டிக்ஸித் மூலம் அனுப்பவில்லை

அரசு மட்டத்தில் மீண்டும் தொடர்புகள் ஏற்பட்டபின்னரே இலங்கை அரசு, சிதம்பரம் குழு மூலம் அனுப்பிய யோசனைகளில் காணப்படும் இடை வெளிகளை நிரப்பக் கூடியதான வியாக்கியானங்கள், புதிய வழிமுறைகளை இந்திய அரசுக்குச் சமர்ப்பிக்கும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சனி புதுடில்லி புறப்பட்டுச் சென்ற திரு டிக்ஸித் ஒரு வாரகாலத்தின் பின்னரே கொழும்பு திரும்புவார் என்று தெரிகிறது.

தெற்காசிய நாடுகளில் பணியாற்றும் இந்தியத் தூதர்களின் மாநாடு ஒன்றிலும் திரு. டிக்ஸித் கலந்து கொள்வார்.

இந்த மாநாட்டிலும் இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஆராயப்பட இருக்கிறது.

(உ-எ)

# போலந்து சொலிடாரிட்டி தலைவர் கைது

### 1981 ஆம் ஆண்டு தொடக்கம் தேடப்பட்டவர் இவர்

**லண்டன், ஜூன் 1**

**போலந்து சொலிடாரிட்டி தீவிர இரகசிய வேலைத்திட்ட தலைவர் பிகொ ட் பூயட்கைது செய்யப்பட்டுள்ளார் என போலந்து அறிவித்துள்ளது.**

1981 ஆம் ஆண்டு தொடக்கம் தலைமறைவாக இருந்த பூயாட் போலந்தின் அரசை கவிழ்க்கசதித்திட்டங்கள் தீட்டியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

1981 ஆம் ஆண்டு போலந்தில் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதை அடுத்து இவர் தலைமறைவாகி விட்டதாகவும் தேடிக்கண்டு பிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அரசு அறிவித்தது.

சொலிடாரிட்டிஇயக்க இரகசிய வேலைத்திட்ட தலைவராக 1981 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட போது பூயாட்டுக்கு வயது 22 மட்டுமே.

போலந்தின் தலைநகரான வார்ஸோ பகுதியிலேயே அவரின் வேலைகள் மையப்படுத்தப்பட்டிருந்ததாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

தீவிர தேடுதல் வேட்டையின் போது பொலீஸ்படை விரித்த வலையில் அவர் மாட்டிக் கொண்டதாக போலந்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

எப்பொழுது எங்கே பிடிபட்டார் என்ற விவரமெதனையும் அந்த அறிக்கை தெரிவிக்கவில்லை என செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

# லிபியாவுக்கு ரஷ்ய ஆயுதங்கள்

### பாதுகாப்பை ஸ்திரப்படுத்த உறுதி

மாஸ்கோ, ஜூன் 1

லிபியாவிற்குக் கூடுதலான ஆயுதங்களை வழங்கி அதன் பாதுகாப்பை ஸ்திரப்படுத்தப் போவதாக ரஷ்யா அறிவித்திருக்கிறது.

லிபியாவிலிருந்து வந்த தூதுக்குழுவுடன் மாஸ்கோவில் பேச்சுவார்த்தை நடத்திய ரஷ்ய உயர் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்

மேற்கு நாடுகளின் பயமுறுத்தல்களிலிருந்து லிபியா பாதுகாக்கப்பட வேண்டும். லிபியாவின் சுதந்திரமும், தன்னாதிக்கமும், இறைமையும் பலப்படுத்தப்படல் வேண்டும். இதற்காக ரஷ்யா பல நவீன ஆயுதங்களை வழங்கும்.

இவ்வாறு அச்சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டது.

ரஷ்ய அதிகாரிகள் இது தொடர்பாக மீண்டும் திரிப்போலியில் சந்தித்து விரிவாக ஆராய்வர் எனவும் முடிவு செய்யப்பட்டது.

(உ-ஒ)

## சந்தாராம் உயர்விருது பெற்றார்

புதுடில்லி, ஜூன் 1

பிரபல சினிமாப் படத் தயாரிப்பாளரான வி. சந்தாராமுக்கு 1986ஆம் ஆண்டிற்குரிய பாரதத்தின் சிறந்த விருதான 'தாதா ஸாஹிப் பல்கே' விருது கிடைத்துள்ளது.

சினிமாத்துறைக்கு இவர் செய்துவரும் அளப்பரிய சிறந்த பணிகளைக் கௌரவிக்கும் முகமாகவே இவ்விருது சந்தாராமிற்கு வழங்கப்பட்டுள்ளது

# இனப்பிரச்சினைகுறித்து அ.தி.மு.க. தீர்மானம்

சென்னை, ஜூன். 1

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மேலும் உயிர், பொருள் சேதங்கள் ஏற்படாமல் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்படி கடந்த வியாழக்கிழமை சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

கூட்ட முடிவில் இத்தகவலை தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மத்தியஸ்த முயற்சியில் இருந்து இந்தியா விலகிக் கொள்ள வேண்டும் என்று தி. மு. க. கோருவது பற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை அமைச்சர் அத்துலத் முதலியும் அதைத்தான் கூறுகிறார். பொது நலவாய அமைப்பின் மத்தியஸ்தத்தை அவர் நாடுகிறார். இது நல்ல அரசியல் அல்ல.— இப்படி அமைச்சர் இராமச்சந்திரன் சொன்னார். (உ-எ)

# இந்திய விமானத்தை தகர்க்க சதி முயற்சி

### கனடா கண்டு பிடித்து முறியடித்துள்ளது

மொன்றீல், ஜூன் 1

இந்திய ஏயர்லைன்ஸ் விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்க்கும் சதி முயற்சி ஒன்றை கனடா முறியடித்துள்ளது.

இந்தச்சதியில் சம்பந்தப்பட இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கனடா அறிவித்துள்ளது.

மொன்றீலிலிருந்து பாரதம் நோக்கி பயணமாக இருந்த விமானத்திலேயே இந்தக் குண்டுகள் வைக்கப்பட்டு இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சதிமுயற்சி தொடர்பாக புலன் விசாரணைப் பிரிவுக்கு சென்ற வியாழக்கிழமை செய்தி கிடைத்தது.

இதைத்தொடர்ந்து சந்தேகத்துக்கு உரியவர்களின் வீடுகளை சோதனையிட்ட பொலீஸார் விமானத்தில் வைக்கப்படத் தயாராக இருந்த குண்டுப் பொதியைக் கண்டு பிடித்து கைப்பற்றினர்.

மேலும் புலன் விசாரணைகள் தொடர்வதாகவும் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது கொலைக்குற்றம் சாட்டி மேலும் விசாரணைகள் தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேலும் 80 பேர் நிலை மோசம்

மாஸ்கோ, ஜூன் 1

அண்மையில் உக்ரேயின் செர்னோபல் அணு ஆலை விபத்தினால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட எண்பது பேர்களின் நிலைமை மேலும் மோசமடைந்து வருகின்றது.

ஏற்கனவே சுமார் 200 பேர் வரையில் இதனால் பாதிப்படைந்திருந்தனர் என்பது தெரிந்ததே.

(எ-ஒ)

# வெளி உலகில்

## 10,000 டாக்டர்கள் பங்களாதேஷில் வேலை நிறுத்தம்

டாக்கா, ஜூன். 1

பங்களாதேஷில் பத்தாயிரம் டாக்டர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

பயிற்சி டாக்டர்கள் 15000 பேரின் 6 அம்சக் கோரிக்கைகளை ஆதரித்து இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

பயிற்சி டாக்டர்களுக்கு சகல வசதி வாய்ப்புக்களும் அளிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாகும்.

## பாகிஸ்தான் சபாநாயகர் சத்தார்

கராச்சி, ஜூன். 1

பாகிஸ்தான் தேசிய சபையின் புதிய சபாநாயகராக ஹமீட் நஸீர் ஸத்தார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய சபாநாயகர் பிரதமர் ஜுனேஜோவின் அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக இருந்தவர் அவருக்கு வயது 42

# பொறுத்தது போதும்; பொங்கி எழுங்கள்!

## இனப் பிரச்சினைபற்றி 'கல்கி' தலையங்கம்

''பொறுத்தது போதும் பொங்கி எழுங்கள்'' — என்ற தலைப்பில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழ்நாடு சஞ்சிகை 'கல்கி' ஜூன் 1ஆம் திகதி இதழில் தலையங்கம் தீட்டி உள்ளது.

தலையங்கம் வருமாறு;

யாழ்ப்பாணம் மீது இலங்கை அரசு ஹெலிக்கொப்டர், விமானங்கள் மூலம்குண்டுகளைப்பொழிகின்றன; ஆஸ்பத்திரிகள் அழிக்கப்படுகின்றன. பெண்கள் மடிகின்றனர். குழந்தைகள் கொல்லப்படுகின்றனர்.

ஈழப்போராளிகளுடன் யுத்தம் செய்வதாகக் கூறிக்கொண்டு ஜெயவஞ்சனா அரசு, ஒரு பாவமும் அறியாத அப்பாவி மக்களைக்கொன்று குவிக்கின்றது; அரக்கத்தனமாக நடந்து கொள்கிறது

புராணத்தில் பார்த்த ஹம்சனும் சமீபத்திய ஹிட்லரும் என்னிடம் பிச்சை வாங்க வேண்டும் என்று கூறாமல் கூறுகிறார் ஜெயவஞ்சனா.

போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை புதிய யோசனைகள் என்று சொல்லிக் கொண்டு அந்தத் திரை மறைவில் ஈழப்போராளிகளை அழித்து விடலாம். அதற்கு கொஞ்சம் அவகாசம் தேவை என்று திட்டம்போட்ட ஜெயவஞ்சனா அரசு, அதுநிறைவேறாமல் போகவே ஆத்திரத்துடன் விமானப் படையை ஏவி தமிழரைக் கொல்கிறது. அவர்களின் வீடுவாசல்களை அழிக்கின்றது. நியூயார்க் டைம்ஸ் கேட்டு செய்தியாளர்கள் அணுகினால் பஞ்சாப்... இழுக்கிறார்.

பஞ்சாபில் சீக்கியர்களுக்கு சம அந்தஸ்துவழங்கப்பட்டுள்ளது ஜனநாயக முறையில் தேர்தல் நடந்தது. சீக்கியரிடம்ஆட்சி உள்ளது.

இதற்கு நேர்மாறாக ஈழத் தமிழரில் பல்லாயிரக் கணக்கான வருக்கு பிரசாவுரிமை மறுக்கப்பட்டது. அவர்களுடைய மொழிக்கு சம அந்தஸ்து மறுக்கப்பட்டது. இதை அறியாதவர் அல்ல ஜெயவஞ்சன. இப்போது உலகை ஏமாற்றப் பார்க்கின்றார்.

பிரதமர் ராஜீவ்காந்தி நடந்து கொள்ளும் விதமோ நம் இதயத்தை உடைப்பதாக உள்ளது.

லிபியாவைத் தாக்க றேகன் விமானங்களை ஏவியபோது—

சாம்பியா, சிம்பாப்வே, பொட்சுவானா நாடுகளில் தென்ஆபிரிக்க இனவெறி அரசு குண்டு மழை பொழிந்தபோது பிரதமர் ராஜீவ் காந்தி காட்டிய ஆத்திரம் யாழ்ப்பாணம்மீது நடந்த தாக்குதல் குறித்து காட்டப்படாதது ஆச்சரியத்தையும் வேதனையையும் தருகிறது.

கோபத்தை, அதிருப்தியை உண்மையாக வெளிக்காட்ட வேண்டிய நேரத்தில் காட்டாமல் இருப்பது பலவீனமாகக் கருதப்படும் என்பதை பிரதமர் மறுக்க முடியுமா?

யாழ்ப்பாணம் வேறு நாடு அல்ல. இலங்கையின் ஒருபகுதி என்பது உண்மையே. அழிபவர் ... தமிழர்கள் ... சகோதரர்கள். பாரதத்திலிருந்து ... போய்க் குடியேறியவர்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வம்சாவழியாக வாழும் தமிழரும் உள்ளனர்.

யாழ்ப்பாணம் மீது குண்டு வீசியதற்கும் புதுடில்லிமீது குண்டு வீசியதற்கும் வித்தியாசம் இல்லை.

இராணுவம்ஈழத்தமிழ் மக்களைக் கொல்வது இந்திய மக்களைக் கொல்வதற்கு ஒப்பானது

மத்திய அரசு மூன்றாவது நபர்போல் இருந்து கொண்டு யாரோ இரண்டு நபர்களுக்கு இடையே மத்தியஸ்தம் செய்வதுபோல் நடந்து கொள்ளும் போக்கு இனியேனும் கைவிடப்பட வேண்டும்.

இந்திய — இலங்கைப் பிரச்சினையாகக் கருதப்படவேண்டும். நேரடிப் பேச்சு வார்த்தையில் ஈடுபடவேண்டும்.

''என்ன சொல்கிறீர்கள்? உண்டா? இல்லையா?-''என்று இந்தியா இலங்கையைத் தட்டிக் கேட்க வேண்டும்.

இலங்கை அரசை மட்டும் அல்ல, ஈழப்போராளிகளையும் கண்டிக்கலாம் அதற்கும் இந்திய மத்திய அரசுக்கு உரிமை உண்டு.

ராஜீவ்! — உங்களை உசுப்பி விட்டுக் கொள்ளுங்கள்.

நல்லவர் என்று பெயர் வாங்கினால் மட்டும் போதாது.

வல்லவர் என்று பெயர் எடுக்க வேண்டிய சந்தர்ப்பமும் உண்டு.

குரலை உயர்த்துங்கள். பலத்தை உணர்த்துங்கள் இல்லையேல்ஜெயவஞ்சனா பாரதத்தைத் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருப்பார்—

இப்படி கல்கி ... தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

(உ. எ.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



**பொய்யாமொழி**

குறள்;
அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

பொருள்;
பொறாமை உடையவனைத் திருமகள் கண்டு பொறாமைப்பட்டுத் தன் தமக்கைக்கு அவனைக் காட்டி நீங்கிவிடுவாள்.

# யாழ் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா ஆகஸ்ட் 30 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ் பல்கலைக்கழக வருடாந்த பொதுப்பட்டமளிப்பு விழா ஆகஸ்ட் மாதம் முப்பதாம் திகதி சனிக்கிழமை மாலை கைலாசபதி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி. தம்பையா நடராசா தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் படிப்பை மேற்கொண்டு கலவரம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழகத் தேர்வுக்குத் தோற்றிய ஆயுள்வேத மாணவர்கள் முதன் முதலாக இவ்விழாவில் பட்டங்களைப் பெறுவர்.

கலாநிதி, முதுதத்துவமாணி, முதுகலைமாணி, கல்விப்பட்டப்பின் டிப்ளோமா, விஞ்ஞானமாணி, கலைமாணி, வணிகமாணி, ஆயுள்வேத சத்திரசிகிச்சை, சங்கீதம், பரதநாட்டியம் டிப்ளோமா ஆகிய தேர்வுகளில் சித்தியடைந்தவர்களுக்கு இவ்விழாவில் பட்டங்கள் அளிக்கப்படும்.

பட்டமளிப்புக்கான வேண்டுகோள்களை 7-7-86 க்கு முன்னர் மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (உ-9)

## அதிபர்கள் கூட்டம்

மானிப்பாய், ஜூன் 2

மானிப்பாய் வட்டாரக் கல்லூரி அதிபர்களின் கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுகிறது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெற உள்ள இக் கூட்டத்தில், ஜூன் மாதம் நடைபெற உள்ள கல்விக்கண்காட்சிகள், பண்ணிசைப் போட்டிகள் போன்றவற்றுக்கான ஒழுங்குகள் பற்றி ஆராயப்படும்.

(உ - 90)

# சமய சந்நிதிகளில்

## சுன்னாகத்தில் லட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், ஜூன் 2

சுன்னாகம் அருள்மிகு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த இலட்சார்ச்சனை கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.

தினசரி காலையும் மாலையும் நடைபெறும் இலட்சார்ச்சனைப் பூசைகள் இன்று திங்கட்கிழமையுடன் நிறைவுறும்.

இன்று விசேட சங்காபிஷேகமும் கணபதி ஹோமமும் நடைபெற்று பஞ்சமுக அர்ச்சனையுடன் பூர்த்தியடையும்.

(உ - ஒ)

## தாவீது அடிகள் நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

அமரர் கலாநிதி ஹ. சி. தாவீது அடிகளின் 5 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று திங்கட்கிழமை மாலை 5.30மணி அளவில் யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஞானம் தமிழ்த்தாது தாவீது மன்றம் இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது. (உ - எ)

## வெங்காய நாற்று விநியோகம்

வட்டுக்கோட்டை, ஜூன் 2

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் யாழ். மாவட்டத்திலுள்ள பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்களின் நன்மை கருதி விஞ்ஞான முறைப்படி போதியளவு நாற்று மேடைகளை அமைத்து பம்பாய் வெங்காய நாற்றுக்களை உற்பத்தி செய்துள்ளது.

மிகத் தரமான நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் யாழ் மாவட்ட பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்கள் மேற்படி சங்கத் தலைவர் திரு. நா. குகராசாவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ 101)

தமிழ், இந்தி, ஆங்கிலம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
T'Phone: 22477



# உதயன்

02.06.1986 திங்கட்கிழமை



பிறந்த நாள்—திருமண வைபவங்கள்
பூப்புனித நீராட்டு விழா—புதுமனை புகுவிழா
போன்ற மங்கல வைபவங்களை
தத்ரூபமாக ஒளிப்பதிவு செய்துகொள்ள

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477


## விசித்திரம்

என்ன முரளியாரே, எங்காலைப் பக்கமாய் இருந்து வாறீர்

ஓ, வேர்ல்ட் பாண்ட், ரேடியோவிலே, பி.பி.ஸி. செய்தி கேட்கிறதுக்காக ரங்கன் மாமாவிட்டை போட்டு வாறியோ.

நீ,வலு கெட்டிக்காரன் தான். யு.டி.ஐ. விவகாரத்தை கண்டு பிடிச்சிட்டாய். ஆனல் நேற்றைக்கு அது என்ன எண்டு கேட்டு எக்கச்சக்கமான "டெலிபோன் கோலு"கள்!

சுதந்திரத்தை ஒருதலைப்பட்சமாகப் பிரகடனம் செய்வதையே, ஆங்கிலத்தில், யு. டி. ஐ. எண்டு சொல்கிறார்கள். (அதாவது Unilateral Declaration of Independence.)

* * *

என்ன, தென்னிலங்கையிலை அடுத்துத் தொடுத்து குண்டு வெடிப்புகள் நடந்த உடனை மந்திமார் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய்ச் சமாளிக்கினம்.

ஆகப் பெரியவர், மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேணும். எல்லாரும் சாரணராக மாற வேணும் எண்டு ஒரு மாதிரித் தட்டிக் கழிச்சுப் பேசி விஷயத்தை முடிச்சுப் போட்டார்.

அச்சாணியார், தன்ரை கட்டளைக்குப் பணியாமல் பஸ்ஸிலை செத்த இராணுவத்தாருக்கு நடந்தது சரிதான் எண்ட மாதிரி சொல்லியிருக்கிறார்.

உப்பிடி வெளியாலை சொல்லுகினம். எனக்கெண்டாப் பெரிய சமிசம். ஏதாவது பெரிசாச் செய்ய யோசிக்காமலே விடுவினம்?

இதுக்கிடையிலை, கொழும்பிலை தமிழற்றை கணக்கை எடுக்கிறதாகவும் செய்தியள் வந்திருக்கு.

ஜூன் மாதம் பிறந்து விட்டதெல்லே. ஜூன் மட்டுமே ஜூலை, ஓகஸ்ட் இந்த மூன்று மாதங்களும் இலங்கைக்குப் பொல்லாத காலம் இரத்தக்களரி மாதங்கள்!!

இந்த மூண்டு மாதங்களும் முடிஞ்சால் செப்டம்பர் அது கழியத்தான் இந்தியா இலங்கை விஷயத்திலை கொஞ்சம் இறுக்கிப் பிடிக்கும் எண்டும் ஒருகதை.

ஆனல் எது, எது எப்பிடி எப்பிடி ஆகுமோ ஆருக்குத் தெரியும்!

புயலுக்குப் பின்தான் அமைதிவரும். ஆனபடியால் நடக்கிறது நான் சொல்லியோ நீ சொல்லியோ நிற்கவா போகுது?

சணம் பித்தம் சணம் வாதம் பிடிச்ச அரசியல்வாதியள் இருக்கும் வரைக்கும், தமிழருக்கு மட்டுமில்லை சிங்களவருக்கும்தான் கூடாது.

சரி மீண்டும் சந்திப்போம். டாடா!

திண்ணைப்பேச்சு

# மட்டக்களப்பில்

# 5,000 தமிழ் அகதிகள்

# பசி, பட்டினி

மட்டக்களப்பு, ஜூன் 2

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் சுமார் 5 ஆயிரம் தமிழ் அகதிகள் பசி, பட்டினியால் வாடுகின்றனர்.

இந்த அகதிகளுக்குத் தொண்டர் ஸ்தாபனங்கள் உதவ முன்வந்தும் அரசஅதிகாரிகளின் அனுமதி கிடைக்காததனல் அம் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இதே வேளை தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசு பாரபட்சம் காட்டுகிறது.

மட்டக்களப்பு பிரசைகள் குழுக் கூட்டத்தில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

மட்டக்களப்பு பிரசைகள் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

சட்டத்தரணி கே. தங்கவடிவேல் தலைமை வகித்தார்.

வன்செயல்களினல் சுமார் 500 வீடுகள் தீக்கிரையாகின.

புலி பாய்ந்த குளத்தில் 98 வீடுகளும், அம்பிலாந்துறையில் 50 வீடுகளும், புல்லுமலையில் சுமார் 350 வீடுகளும் தீக்கிரையாகின.

இதனல் சுமார் 5,000 தமிழ் அகதிகள் முகாம்களில் உள்ளனர்.

இருதயபுரம் சம்பவத்தில் அகதிகளான சிங்களவர்களுக்கு அரசு ஒழுங்காக நிவாரணம் வழங்கி வந்தது.

புல்லுமலைத் தமிழ் அகதிகளுக்கோ சம்பவம் நடந்து ஒருவாரம்சென்ற பின்னர்தான் சீனியும் அரிசியும் வழங்கப்பட்டன.

அரசின் அசிரத்தை காரணமாக அகதிமுகாம்களில் உள்ள தமிழ் அகதிகள் பசி, பட்டினியினல் வாடுகின்றனர்.

இப்படி கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ-21)

## திலகரத்தின கொழும்பில்

கொழும்பு, ஜூன் 2

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதர் பெர்னுட் திலகரத்தின நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

இனப்பிரச்சினை பற்றி இந்திய அரசு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்கள் பற்றிய விவரங்களை இலங்கை அரசுத் தலைவர்களுக்குத் தெரிவிக்கவே, திரு. திலகரத்தின கொழும்பு திரும்பினர். (உ—எ)

## ஷெல் தாக்குத...

விருந்து திடீரென நகரின் பல பகுதிகளை நோக்கியும் "ஷெல்" தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனல் இரண்டு சிறுவர்கள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

முப்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியிலும், தனியார் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

சுமார் 25க்கும் மேற்பட்ட "ஷெல்" குண்டுகள் கொட்டடி, நாவாந்துறை, குருநகர், யாழ் பெரியகடை வாழைப்பழக் கடைப் பகுதி, கடற்கரை வீதி, கே. கே. எஸ். வீதி, வைத்தீஸ்வராக் கல்லூரி, சத்திரத்துச் சந்தி ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன.

இதனல் சத்திரச் சந்தியில் ஒருவரும் குருநகரில் இருவரும், பெரியகடையில் வேறு ஒருவரும் கொலையுண்டனர்.

"ஷெல்" தாக்குதல்களினல் காயமடைந்தவர்களில் பத்துக்கும் மேற்பட்டோர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை வீதியில் உள்ள இரண்டுகடைகளும், கொட்டடியில் உள்ள சில வீடுகளும், குருநகரில் ஒரு வீடும் நேற்றைய "ஷெல்" தாக்குதல்களினல் சேதமடைந்தன.

சத்திரத்துச் சந்தியில் இறந்தவர் மலையகத்தைச் சேர்ந்த 'மல்லி' என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது சடலத்தை மீட்கச் சென்றவர்கள் மீதும்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர் கயிறு ஒன்றின் உதவியுடன் இவரது சடலம் இழுத்து எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## தமிழ் ஈழ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா இராணுவ முகாம்களுக்கும்இடையில் இருக்கும் வீதித்தடையை நீக்குவதற்காகவும் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம்களை மேலும் பலப்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கை எங்களால் முறியடிக்கப்பட்டது.

எமது தற்கொலைப் படையினரால் திட்டம் இட்டு வைக்கப்பட்ட தொடர்பு தன்னியக்க கண்ணிவெடியில் சிறிலங்கா அரசால் தென்கொரியாவில் இருந்து அதி செலவில் கொண்டு வரப்பட்ட பாரிய கவச வாகனம் நேற்று பண்ணைச்சங்கிலிப்பாலம் அருகாமையில் தகர்க்கப்பட்டு கடலில் வீசப்பட்ட நிலையில் நிர்மூலமாக்கப்பட்டது.

இத்தாக்குதலில் பதினென்றிற்கும் அதிகமான கூலிப்படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் சிலர் காயம் அடைந்தனர். — இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சென்பீட்டர்ஸ் தேவாலயம் சேதம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

சனிக்கிழமை இரவு இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் யாழ். சென். பீட்டர்ஸ் தேவாலயப் பகுதியும் சேதம் அடைந்தது.

தேவாலயத்தின் முன் சுற்று மதிலும் தேவாலயத் தூண்களும் சிறிது சேதம் அடைந்தன.

டெலிபோன் கம்பிகளும் அறுந்துவிழுந்தன.

## 9 தமிழர் சுட்டுக்கொலை?

திருகோணமலை, ஜூன் 2

தம்பலகமம் கிராமத்தில் சில வீடுகள் எரிக்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அங்கு 9 பேர்வரை சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## வெலிகட..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணுவிரதம் ஒன்றை மேற்கொண்டனர். மே 19, 20, 21 ஆம் திகதிகளில் தலா பத்துப் பேராக உண்ணுவிரதத்தை மேற்கொண்டனர். மே 22, 23, 24 ஆம் திகதிகளில் தலா 20 பேர் வீதம் உண்ணுவிரதம் இருந்தனர்.

மே 31 முதல் தான் 50 தமிழ்க் கைதிகள் சாகும் வரை உண்ணுவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஹென்றி பெரேரா, கிரிமினல் குற்றக் கைதிகளுக்கான சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளார்.

(உ-எ-2)

## வயாவிளான்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதையடுத்து திடீரென மேலெழுந்த ஹெலிக்கொப்டர் அதன்பின்னர் உயரத்தில் நின்றபடியே சுட்டது.

தொடர்ந்து வயாவிளான் முகாமில் இருந்து குரும்பசிட்டிப் பகுதியை நோக்கி 'ஷெல்' ஏவப்பட்டதுடன் துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

நேற்று அதிகாலை 6-30 மணிக்கு மிக உயரமாக பெரிய சத்தத்துடன் பலாலியைநோக்கி வந்து இறங்கிய ஒரு புதுவகை விமானத்தில் இருந்து வந்தபொருள்களே வயாவிளான் முகாமுக்கும் ட்ரக்குகளில் எடுத்து வரப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இச்சம்பவங்களால் வடமூலை, குட்டியப்புலம், திடற்புலம், குரும்பசிட்டி புன்னலைக் கட்டுவன் பகுதியில் உள்ள மக்கள் பதற்றமடைந்தனர்.

(உ-119)

## யாழ் நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து 'ஷெல்' குண்டுகள் ஏவப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

போராளிகளும் ரொக்கெட் லோஞ்சர்கள், நவீன துப்பாக்கிகள் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

மாலை சுமார் ஐந்து மணிவரை மோதல்கள் விட்டு விட்டு நடந்து கொண்டிருந்தன.

மாலை சுமார் நான்கு மணியளவில் யாழ் நகரிற்கு மேலாகப் பறந்து வந்த ஹெலிக்கொப்டர் ஒன்றிலிருந்து நகரில் குழுமி நின்ற மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து போராளிகள் ஹெலிக்கொப்டரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதனையடுத்து உயரப் பறந்து சென்ற ஹெலிக்கொப்டர், பலாலிப் பக்கமாக பறந்து சென்றது. (அ-உ-10)

## 28 ...ழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணப்பத்தை நிராகரித்து விட்டது.

இதன் காரணமாக மேலும் 2 வாரகாலத்துக்குப் போலந்து இவர்களின் விஸாவை நீடித்துள்ளது.

இதனிடையில், ஏதாவது நாட்டில் அரசியல் புகலிடம் பெற்றுத் தருமாறு இவர்கள் ஐ. நா. அகதிகள் ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளனர். (உ-எ-2)

## விசுவலிங்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை காந்திய சேவா சங்கம், திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபை ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டும் உழைத்தவராவார்.

அன்னரின் இறுதிச் சடங்குகள் இன்று நண்பகல் தாவடியில் நடக்கின்றன.

## காலமானர்

### கார்த்திகேசு விசுவலிங்கம்

ஓய்வுபெற்ற பொலீஸ் திணைக்கள நிர்வாக அதிபரும், ஓய்வு பெற்ற குடிவரவு குடியகல்வு திணைக்கள உதவிக்கட்டுப்பாட்டாளரும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவரும், சற்றே ரிவியு பொதுமுகாமையாளரும், பிரபல சமூக சேவையாளருமான கார்த்திகேசு விசுவலிங்கம் காலமானர்.

அன்னர் மகாலக்ஷ்மியின் அன்புக் கணவரும் சிவானந்தன் (பொறியியலாளர், கனடா) ஞானனந்தன் (மருத்துவப்பீட இறுதியாண்டு யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தினியின் (கனடா) அன்பு மாமனுரும் ஆவார்.

இவர் தங்கம்மாவின் சகோதரரும், திருமதி செல்லத்துரையின் (அளவெட்டி) மருமகனும், நாகலிங்கம் (சுதுமலை), பேராசிரியர் மகாலிங்கம் (பேராதனை பொறியியல் பீடம்) ,அருந்தவநாயகி, அருளானந்தம், விக்னேஸ்வரி,சிவகுரு, வைத்திய கலாநிதி சிவனேஸ்வரி சிறிரங்கலிங்கம் (இங்கிலாந்து), செந்தில்நாதன் (கனடா), சிவகுமாரன் (லண்டன்), செல்வக்குமாரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் தாவடிப் பிள்ளையார் கோயிலடியில் உள்ள அன்னரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 2.6.1986 திங்கள் (இன்று) நண்பகல் 12 மணிக்கு தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

## விளையாட்டரங்கு

உதைபந்தாட்டம்

### நல்லூர் அணி சாம்பியன்

உதவி அரசாங்க அதிபர்பிரிவிற்கானபோட்டியில்

- விளையாட்டு செய்தியாளர் சண். ஜோண்சன் -

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் 22 வயதுக்கு உட்பட்டஅணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர்பிரிவு அணி சாம்பியனனது.

இந்த அணி யாழ்ப்பாணம் உதவிஅரசாங்கஅதிபர் பிரிவு அணியை 3 க்கு 1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

நல்லூர் அணியின் சார்பில் ஆடிய சி. சதீஸ்குமார் அபாரமாக விளையாடி இரண்டு கோல்களைப் போட்டார்.

இந்த ஆட்டத்திற்கு திரு எஸ். தேவராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இந்த இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாண மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் சந். சிங்கராஜர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

#### அரை இறுதி ஆட்டங்கள்

இதற்கு முன்னர் நடைபெற்ற அரை இறுதிப் போட்டிகளில்—

யாழ் உதவி அரச அதிபர் பிரிவு அணி சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு அணியை 2 க்கு 1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

நல்லூர் உதவி அரச அதிபர் அணி போட்டியின்றியே இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

முதல் அரை இறுதிப் போட்டிக்கு எம். தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார்.

மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸின் ஏற்பாட்டில் மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. ஏ. எஸ். குணரத்தினம் தலைமையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. (உ-7)

### மெய்வல்லுனர்போட்டி 7ஆம் 8ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையேயான மெய்வல்லுனர் போட்டி இம்மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகும்.

7 ஆம் திகதி பெண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டமும், ஆண்களுக்கான 10,000 மீற்றர் ஓட்டமும் நடைபெறும்.

ஏனைய போட்டிகள் 8 ஆம் திகதி நடைபெறும்.

யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற சகல போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மெய்வல்லுனர் போட்டி முடிவின்போது வழங்கப்படும்.

அன்றைய நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

கரபந்தாட்டம்

இதேவேளை யாழ் மாவட்டத்தில் உள்ள உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கிடையேயான கரபந்தாட்டப் போட்டியும் நடைபெற்று முடிந்துள்ளது.

ஆண்களுக்கான இந்த 'நொக் அவுட்' போட்டி பாஷையூர் சென். அன்ரனீஸ் ஆடுதிடலில் நடைபெற்றது. (இ-7)

## சிறிமாவுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

அப்புதிய விளக்கங்கள், வழிமுறைகளைத் தயாரிப்பதற்கு முன்னர் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்காவின் கருத்தையும் அறிந்து கொள்ளவே இப்பேச்சுக்கள் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. (அ-உ-எ)

மென்பந்து கிரிக்கெட்

### சில்வர் ஸ்ரார்ஸ் சுற்றுக்கிண்ணம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

"சில்வர்ஸ்ரார்ஸ்" சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இரண்டாவது வருடமாக நடைபெறும் இந்த வருடாந்த சுற்றுப் போட்டி ஜூன், ஜூலை மாதங்களில் வரும் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் நடைபெறும்.

நொக் அவுட் முறையில் நடத்தப்படும் இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்களை ஜூன் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுக்கும் மேலதிக விவரங்களுக்கும் செயலாளர், சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் 57(15) மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

11 பேர் பங்கு பற்றும் 20 ஓவர்களைக் கொண்ட போட்டியாக இந்தப் போட்டிகள் அமையும். (உ-7)


அல்லலுறும் எம் இன அகதிகள்
புனர் வாழ்விற்காக
தனது இறுதி மூச்சுவரை
அயராது உழைத்து
அமரத்துவம் எய்திய

விசுவலிங்கம் ஐயா

அவர்களுக்கு
எமது நெஞ்சம் நெகிழ்ந்த
அஞ்சலி

ஐயா அவர்களுடைய ஆத்மா இறை அடி எய்தவும்
ஐயா ஆற்றிய அரும்பணிகள் செவ்வனே தொடரவும்
பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

-- ரெலிகுளோப்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 2-06-1986

Printed and Published by Uthavan Publications (Private) Ltd 15 Second Lane, Power House Road, Jaffna Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number Q J 60 /86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org